5. அறிக்கை அளித்தல்

(அ. பொது நிறுவனங்கள் குழு)

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தின் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத்தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுக்கான (வணிகத்துறைகள் பற்றிய) மேற்படி குழுவின் இருபதாவது அறிக்கை.

(2) 1976–77 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் சதர்ன் பிரிக் ஒர்க்ஸ் லிமிடெட் குறித்த 3.01 முதல் 3.05 ஆம் பத்திகள் மீதான இருபத்தி ஒன்றாம் அறிக்கை.

(3) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகம்) அறிக்கையில் கண்ட தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகளின் மீது பொது நிறுவனங்கள் குழு 1977–79) அளித்த ஒன்பதாவது அறிக்கையில் அடங்கியுள்ள(பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் இருபத்தி இரண்டாம் அறிக்கை.

(ஆ.) பொதுக் கணக்குக் குழு

திரு. வி கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1973–74 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களுக்கும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மிகையாகச் செலவழித்த தொகைகள் பற்றி (1977-79) ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பதினேழாவது அறிக்கையை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு

சென்னை மாநகர் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1983

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.